# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| OS.No. 53/2023 | Date : 24.04.2025 | PW 2 |
|---|---|---|
| Name: சேகர் | த/பெ. கந்தசாமி கவுண்டர் | |

**1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதியும் 1 ஆம் பிரதிவாதியும் நானும் எவ்வாறு நெருங்கிய உறவு முறை நீங்களும் அவர்களும் அத்தை மகன் மாமன் மகனா என்றால் அவ்வாறு இல்லை. வாதி மற்றும் 1 ம் பிரதிவாதியின் தகப்பனார் இறந்த பிறகு வாதி அவர் பெயருக்கு எழுதி வைக்கப்பட்ட சொத்தை தனிப்பட்ட முறையில் அவர் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். வாதி அனுபவித்து வரும் தனிப்பட்ட சொத்தை அவர் யாருக்கு வேண்டுமானாலும் விற்பனை செய்யலாம் என்றால் சரிதான். அதே போல் 1 ஆம் பிரதிவாதி கண்ணன் என்பவரும் அனுபவித்து வரும் சொத்து அவரது தனிப்பட்ட சொத்து என்றும் அதை அவர் யாருக்கு வேண்டுமானாலும் விற்பனை செய்யலாம் என்றால் சரிதான். வாதி மற்றும் 1 ஆம் பிரதிவாதிக்கு சொத்தை பிரித்து கொடுக்கும் போது கோவிலுக்கும், வாதி மற்றும் 1 ஆம் பிரதிவாதியின் சமாதிக்கும் சென்று வரக்கூடிய வழி தடத்தை தடுக்க கூடாது என்று கூறி நானும் மேலும் எம்.எம்.ரத்தினவேலு மற்றும் 3 நபர்கள் சேர்ந்து பிரித்து கொடுத்தோம். அவ்வாறு எந்த வருடம் பிரித்து கொடுத்தோம் என்றால் வருடம் நினைவில்லை. அவ்வாறு சொத்தை அவர்களின் தகப்பனார் இறந்தபிறகு பிரித்து கொடுத்தோமா என்றால் இல்லை. அவர் உயிருடன் இருந்த காலத்திலேயே பிரித்து கொடுத்தோம். நான் சொல்வது தவறு என்றும் வாதி மற்றும் 1 ஆம் பிரதிவாதியின் தகப்பனார் உயிருடன் இருக்கும்போது அவரது சொத்தை பொறுத்து அவரே பிரித்து கொடுத்திருப்பார் என்றும் நாங்கள் பிரித்து கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றும் ரத்தினவேலு மற்றும் நாங்கள் அனைவரும் சேர்ந்து பிரித்து கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும் ரத்தினவேலு மற்றும் சிலரும் சேர்ந்து வாதி மற்றும் 1 ஆம் பிரதிவாதிக்கு எவ்வளவு சொத்து பிரித்து கொடுத்தோம் என்றால் வாதி சீனிவாசனுக்கு 2 ஏக்கரும், 1 ஆம் பிரதிவாதி கண்ணனுக்கு 2 ஏக்கரும் பிரித்து கொடுத்தோம். சாட்சி தானாக முன்வந்து சீனிவாசனுக்கு 3 ஏக்கர் பிரித்து கொடுத்ததாக கூறுகிறார். நாங்கள் பாகப்பிரிவினை செய்து வைத்ததாக சொல்லப்படும் பாகப்பிரிவினை பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பமிட்டேனா என்றால் சாட்சி கையொப்பம் செய்யவில்லை. வாதிக்கும் 1 ஆம் பிரதிவாதிக்கும் ஒரே நாளில் பாகப்பிரிவினை பத்திரம் பதிவு செய்து வைத்தோமா என்றால் ஆமாம். சாட்சி தற்போது கண்ணனுக்கு பத்திரம் பதிவு செய்ய நாங்கள் அனுப்பிவைத்தோம் என்றும் இருவரும் ஒரே நாளில் பத்திரம் பதிவு செய்தார்களா என்று எனக்கு தெரியாது என்றும் கூறுகிறார். மேற்படி பதிவு செய்யப்பட்ட பத்திரத்தை வாங்கி படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. பத்திர பதிவுக்கு நான்

செல்லவில்லை. கண்ணனுக்கு மேற்கு பக்கம் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. சீனிவாசனுக்கு மேற்கிலும், வடக்கிலும் நிலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. நங்கவள்ளி - மேச்சேரி ரோட்டின் கிழக்கு பக்கத்தில் சீனிவாசன் நிலம் உள்ளது. மேற்படி ரோட்டை ஒட்டி இறங்கியதும் சீனிவாசனின் நிலம், கிணறு, வீடு, தோட்டம் ஆகியவை அமைந்துள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல் வாதி மற்றும் 1 ஆம் பிரதிவாதியின் தாய் மற்றும் தகப்பனாரின் உடல்கள் குழிதோண்டி புதைக்கப்படவில்லை என்றும் அவர்களது உடல்கள் சர்வே எண். 39 யில் சீனிவாசனின் நிலத்தில் அமைந்துள்ள கிணற்றின் அருகில் தகனம் செய்யப்பட்டது என்றும் மேற்படி உண்மையை மறைத்து வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கின்றேன் என்றால் சரியல்ல. சீனிவாசனின் கிரய ஆவணத்தில் வழி பாதை எதுவும் குறிப்பிட்டு எழுதவில்லை என்றும் அவ்வாறு பாதை விடுமாறு கூறி நான் பேசியதாக தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சீனிவாசனுக்கு அவரது தகப்பனார் 4 ஏக்கர் 44 செண்ட் நிலமும், முதல் மனைவி கனகவள்ளிக்கு 55 செண்ட் நிலமும், 1 ஆம் பிரதிவாதி கண்ணனுக்கு 1 ஏக்கர் 90 செண்ட் நிலமும் எழுதி வைத்துள்ளார் என்றும் மேற்படி விவரம் பற்றி எனக்கு தெரியாமல் மேற்படி சொத்துக்கள் குறித்து நான் பஞ்சாயத்து செய்ததாக பொய்யாக சாட்சிமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எம்.எம்.ரத்திவேலுவையும், மாணிக்கவேலுவையும் 1 ஆம் பிரதிவாதி நேரில் சந்தித்து என்னுடன் சேர்ந்து பஞ்சாயத்து செய்தார்களா என்று கேட்டபோது அவர்கள் பஞ்சாயத்து எதுவும் செய்யவில்லை என்றும் 1 ஆம் பிரதிவாதியிடம் கூறிவிட்டார்கள் என்றும், நாங்கள் மூவரும் சேர்ந்து பஞ்சாயத்து செய்ததாக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எம்.எம்.ரத்திவேலும், மாணிக்கவேலும் நானும் 1 ஆம் பிரதிவாதியிடம் சொத்தை மூன்றாம் நபருக்கு விற்க கூடாது என்று சொன்னதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. நானும் மற்ற நபர்களும் சேர்ந்து 1 ஆம் பிரதிவாதியின் சொத்தை விற்க தடையாக இருக்கிறோம் என்றும் நாங்கள் சொத்தை விற்கும் தரகு தொழில் செய்கிறோம் என்றும் 1 ஆம் பிரதிவாதியின் சொத்தை ஏமாற்றி கமிஷன் பெறும் நோக்கத்தோடு வாதியிடம் வழக்கு தாக்கல் செய்யுமாறு அறிவுறுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. ரத்தினவேல் மற்றும் மாணிக்கவேல் பெயர்களை பயன்படுத்தி நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் மூவரும் சேர்ந்து 1 ஆம் பிரதிவாதிக்கு பிரித்து கொடுத்ததாக சொல்லப்படும் சொத்தின் சக்குபந்தி தெரியுமா என்றால் தெரியாது. சீனிவாசனுக்கு பிரித்து கொடுத்ததாக சொல்லப்படும் சொத்தின் சக்குபந்தி தெரியுமா என்றால் தெரியாது. கெச்சம்பட்டிக்கு செல்லும் ரோடு கிழக்கு புறத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி செல்கிறது. கெச்சம்பட்டி ரோட்டில் இருந்து 200 அடி தூரத்தில் முனியப்பன் கோவில் உள்ளது. மேற்படி முனியப்பன் கோவில் கிழக்கு பார்த்து உள்ளது. கெச்சம்பட்டி ரோட்டில் இருந்து முனியப்பன் கோவிலுக்கு செல்லமுடியும் என்றால் செல்லலாம். 1 ஆம் பிரதிவாதி வழிவிட்டால்தான் போகமுடியும். 1 ஆம் பிரதிவாதி

கெச்சம்பட்டி ரோட்டில் இருந்து முனியப்பன் கோவிலுக்கு வருவதற்கு 200 அடி தூரத்திற்கு 3000 சதுர அடி அளவிற்கு 10 அடி அகலத்திற்கு பாதை விட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பாதை வழியாக வாதியும், 1 ஆம் பிரதிவாதியும் மற்ற வாரிசுகளும் முனியப்பன் கோவிலுக்கு சென்றுவர அனுமதி அளித்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 1 ஆம் பிரதிவாதி சேலத்தில் செட்டில் ஆகிவிட்டார் என்றும் அவர்களது பெற்றோரை வாதிதான் பராமரித்தார் என்றும் நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதி 1968 ம் ஆண்டு பாரத ஸ்டேட் வங்கி, மேட்டுர் கிளையில் எழுத்தர் பணியில் சேர்ந்தார் என்றும் அப்போது அவருக்கு மாத சம்பளம் ரூ.500/- என்றும் அதில் திருமணத்திற்கு பிறகு 1 ஆம் பிரதிவாதியின் பெற்றோரின் பராமரிப்பிற்காக ரூ.200/- கொடுத்து வந்தார் என்றும் சொன்னால் அது பற்றி தெரியாது. 1 ஆம் பிரதிவாதியின் திருமணத்திற்கு முன்பு அவரது முழு சம்பள பணத்தையும் அவரது பெற்றோரின் பராமரிப்பிற்கு கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன்பிறகு 1 ஆம் பிரதிவாதியின் பதவி உயர சம்பளம் உயர அவரது பெற்றோரின் பராமரிப்பிற்கு தகுந்தவாறு பணத்தை கொடுத்துவந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1 ஆம் பிரதிவாதியின் சகோதரியான வைரம் திருமணத்தை தவிர்த்து மற்ற சகோதரிகளான ராஜாமணி, விஜயா, சகோதரர் சீனிவாசனின் ஆகீயோருக்கு 1 ஆம் பிரதிவாதிதான் திருமணம் செய்து வைத்தார் என்றும் சகோதரிகளுக்கு நகைகளையும் 1 ஆம் பிரதிவாதிதான் போட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி மற்றும் 1 ஆம் பிரதிவாதியின் தகப்பனார் எவ்வாறு இறந்தார் என்றால் கேன்சர் நோயால் இறந்தார். 1 ஆம் பிரதிவாதி ஈரோட்டில் பாரத ஸ்டேட் வங்கியில் மேலாளராக பணிபுரிந்த போது 1 ஆம் பிரதிவாதியின் தகப்பனாரை ஈரோட்டில் உள்ள டாக்டர் Pai மருத்துவமனையில் வைத்து 41 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை அளித்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1 ஆம் பிரதிவாதி கோயமுத்தூரில் பாரத ஸ்டேட் வங்கியில் மேலாளராக பணிபுரிந்த போது 1 ஆம் பிரதிவாதியின் தாயாருக்கு வயிற்றில் அறுவைசிகிச்சைக்காக மருத்துவமனையில் வைத்து உள்நோயாளியாக சிகிச்சை அளித்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நல்லதம்பி என்ற ஒரு வாரிசு இருந்த விவரம் எனக்கு தெரியும். நல்லதம்பி வாய் திக்கி பேசுவார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி நல்லதம்பிக்கு ஈரோட்டில் உள்ள முத்துசாமி மருத்துவமனையில் தொண்டையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்றும் அதை 1 ஆம் பிரதிவாதி செலவு செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நல்லதம்பிக்கு தொழில் இல்லாத காரணத்தினால் 1 ஆம் பிரதிவாதி தறி அமைத்து கொடுத்தார் என்றும் பின்னிட்டு நல்லதம்பி இறந்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1980 ம் வருடத்தில் 1 ஆம் பிரதிவாதியின் தகப்பனார் சொத்தின் மீது ரூ.50,000/- கடன் பெற்றிருந்தார் என்றும் அந்த கடனை 1 ஆம் பிரதிவாதி திருப்பி செலுத்தி சொத்தை மீட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விவரங்கள் எதுவும்

தெரியாமல் நான் அவர்களின் நெருங்கிய உறவினர் என்று பொய்யாக சாட்சியமளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் ரத்தினவேல், மாணிக்கவேல் ஆகியோர் பஞ்சாயத்து செய்த விவரத்தை வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையில் சொல்லியுள்ளாரா என்பது பற்றி எனக்கு விவரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உண்மையிலேயே நாங்கள் பஞ்சாயத்து செய்திருந்தால் மேற்படி விவரத்தை வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லியிருப்பார் என்றும் நாங்கள் பின்னிட்டு ஜோடிக்கப்பட்ட சாட்சி என்றால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதி சொத்தை விற்கிறார் என்ற விவரம் பற்றி எனக்கு நேரிடையாக தெரியாது என்றும் சீனிவாசன் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். 12.02.2023 ந்தேதி 1 ஆம் பிரதிவாதி நிலத்தரகர்களை கொண்டு அவரது நிலத்தை அளப்பதாக தகவல் தெரிந்து நாங்கள் மூவரும் சென்று நிலத்தை வாதிக்கு விற்குமாறு சொன்னதாக கூறுவது தவறு என்றால் சரியல்ல. பொதுவாக நிலத்தை நில அளவையர் வைத்துதான் அளப்பார்கள் என்றும் நில தரகர்களை வைத்து 1 ஆம் பிரதிவாதி அளந்ததாக நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதி நிலத்தை விற்பதாக எங்கள் மூவரிடமும் வாதி எந்த இடத்தில் வைத்து சொன்னார் என்ற விவரத்தை எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 12.2.2023 ம் தேதி 1 ஆம் பிரதிவாதி நிலத்தை விற்கும் விவரத்தை எங்கள் மூவரிடமும் சொன்னதாக வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும் மேற்படி விவரத்தை உண்மையிலேயே சொல்லியிருந்தால் அது குறித்து வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லியிருப்பார் என்றால் சரியல்ல. மூன்றாம் நபருக்கு விற்றால் வாதிக்கு பிரச்சினை ஏற்படும் என்று நான் 1 ஆம் பிரதிவாதியிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல சொன்னேன். அனைத்து சொத்துக்களும் 1 ஆம் பிரதிவாதிக்கு அவரது தகப்பனார் மூலம் வந்த சொத்து என்பதால் வாதியை நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு நாங்கள் சொன்னதாக கூறுவது தவறு என்றால் சரியல்ல. பொது வழிநடை பாத்தியம் ஏதும் இல்லாத காரணத்தினால் 1 ஆம் பிரதிவாதி சொத்தை தன்னிச்சையாகவும் சுதந்திரமாகவும் அவரது சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தில் வாதிக்கு வாங்கும் முன்னுரிமை உள்ளது என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. வாதி என்னிடம் ஆலோசனை பெற்றுதான் வழக்கு தாக்கல் செய்தாரா என்றால் பஞ்சாயத்து பேசியும் 1 ஆம் பிரதிவாதி ஒத்து வராத காரணத்தினால் வாதியை பார்த்து கொள்ளுமாறு அவரிடம் கூறிவிட்டேன். வாதியிடம் கோர்ட்டில் சென்று பரிகாரம் தேட சொல்லி அறிவுறுத்தினோம் என்று எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுவிட்டு தற்போது தெரியாது என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கின்றேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை

வாதிக்கு விற்பனை செய்யுமாறு 1ஆம் பிரதிவாதியிடம் கூறினோம் என்று முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள நிலையில் எந்த தேதியில் எப்போது கூறினோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் மூன்று நபர்கள் எந்த தேதியில் எந்த இடத்தில் வைத்து என்ன நேரத்தில் பஞ்சாயத்து பேசினோம் என்று முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 1ஆம் பிரதிவாதி அவரது சொத்தை யாரிடமும் விற்கவில்லை என்றும் கிரய ஒப்பந்தம் ஏதும் போடவில்லை என்றும் சொன்னால் ராஜா என்கிற அவரது பங்காளியிடம் நில தரகர் ரூ.10 லட்சம் பெற்று வந்து 1ஆம் பிரதிவாதியிடம் கொடுத்தார் அதன்பிறகு அந்த பணத்தை திருப்பி கொடுத்துவிட்டார்கள். ஒரு நில தரகர் நில உரிமையாளரிடம் ரூ.10 லட்சம் கொடுத்ததாக சொல்லும் விவரம் ஏற்புடையதாக இல்லை என்றால் சரியல்ல. நிலத்தை வாங்குபவர்தான் பணத்தை நில உரிமையாளரிடம் கொடுப்பார் என்றும் யாரோ ஒரு நில தரகர் பணத்தை கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் கூட்டுபட்டாவாக இருப்பதை தனிப்பட்டாவாக மாற்றுவதற்கு நில அளவையர் வைத்து அளவீடு செய்யதான் 1ஆம் பிரதிவாதி முயற்சி செய்தார் என்றும் அவர்களை அளவீடு செய்ய விடாமல் வாதியும் அவரது மனைவியும் தடுத்துவிட்டார்கள் என்றும் சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கைப்பற்றி எதுவும் முழுமையாக தெரியாத காரணத்தினால் எனது சாட்சியம் ஏற்றுகொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**2 மற்றும் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

ஒம்/–சேகர்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எல்.கமலகண்ணன்,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.